ORIGINAL ARTICLE

# தொடக்கப்பள்ளி படிநிலை ஒன்றில் பையப் பயிலும் மாணவர்களுக்கான வாசிப்பு அணுகுமுறை [TODAKKAPPALLI PADINILAI ONDRIL PAIYAP PAYILUM MAANAVARKALUKKAANA VAASIPPU ANUKUMURAI]

# READING APPROACH FOR PHASE I PRIMARY SCHOOL CHILDREN

**கண்ணதாசன் சுப்ரமணியம் *[1] / Kannadhasan Subramanian *[1]**
**சசிகுமார் [2] / Sasikumar [2]**

[1] Department of Modern Language, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia. Email: kannasanthi@yahoo.com
[2] International Institute of Tamil Studies, Chennai, India. Email: sasi5785@gmail.com

*Corensponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/112

**Abstract**

This research paper gives an insight knowledge about the implementation of KBSR in 1983, during which remedial was much emphasized after each skill was taught. This paper mainly focuses on 2 skills of the 8 reading skills outlined in KSSR. The researcher recommends teaching methods to overcome reading weakness among slow learners by mastering 2.5 (able to read and understand new words) and 2.6 (able to read and understand different reading materials) of the eight skills mentioned earlier. Research work done by Subbu Reddy was taken in consideration when preparing this research paper. He has desisted five methods for mastering eading skills among slow learners. They are writing method, word method, look and read method, and phrase method and story method. This research had given details approaches aligned from simple to difficult, such as: searching for words beginning with a given letter; lock for two lettered words and constructing phrases with two simple words. In conclusion, the research has succeeded in promoting reading skills among slow learners.

**Keyword:** Insight, knowledge, remedial, focuses, recommends, overcome, methods, constructing, succeeded, promoting.

**ஆய்வுச் சாரம்**

1983-ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தின் அமலாக்கத்தின் உள்ளார்ந்த அறிவைப் பற்றியும் அவ்வமயம் ஒவ்வொரு திறனைக் கற்பித்தலின் எவ்வாறு குறைநீக்கற் கற்பித்தல்

வலியுறுத்தப்பட்டது என்பதைப் பற்றியும் இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கின்றது. கே.எஸ்.எஸ்.ஆர் (KSSR) எனும் பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள எட்டு (8) வாசிப்புத் திறன்களுள் இரண்டை மட்டும் இவ்வாய்வு மையப்படுத்துகிறது. வாசிப்பில் வலிவின்மையைக் களைய ஆய்வாளர் சில அணுகுமுறைகளைப் பரிந்துரைக்கிறார். இவ்வணுகுமுறைகளால் 2.5 (புதிய சொற்களை வாசித்தலும் பொருள் அறிதலும்) 2.6 (பலதரப்பட்ட வாசிப்புப் பகுதிகளை வாசித்துப் புரிந்துகொள்ளல்) ஆகிய திறன்களில் திறமையை வளர்த்துக் கொள்ளலாம். இவ்வாய்வுக் கட்டுரையைத் தயாரிப்பதில் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்களின் ஆய்வு பேருதுவியாக அமைந்திருந்தது. அவர் தம் ஆய்வில் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ள ஐந்து முறைகளை வகுத்துள்ளார். அவை, எழுத்து முறை, சொல் முறை, பார்த்துச்சொல்லும் முறை, சொற்றொடர் முறை, கதை முறை. இந்த ஆய்வு இலகுவான பயிற்சியில் தொடங்கி கடினமான பயிற்சிவரை மேற்கொள்ள வேண்டிய முறைகளைத் தொகுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, ஓரெழுத்தைக் கொடுக்கச் சொல் தேடுதல்; ஈரெழுத்துச் சொற்களைத் தேடுதல்; இரண்டு சொற்களால் எளிதான சொற்றொடரை உருவாக்குதல் போன்றவை. இறுதியாக, இந்த ஆய்வு பையப்பயிலும் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த வெற்றி கண்டுள்ளது என்பது கண்டறியமுடிந்தது.

**கருச்சொற்கள்:** உள்ளார்ந்த, அறிவு, குறைநீக்கல், மையப்படுத்தல், பரிந்துரைத்தல், களைய, முறைகள், உருவாக்குதல், வெற்றி கண்டுள்ளது, மேம்படுத்த.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 8th October 2020, revised 25th October 2020, accepted 3rd November 2020

## முன்னுரை

மலேசியக் கல்வி அமைச்சு, தொடகத் தமிழ்ப்பள்ளியில் படிநிலை ஒன்றில் பையப் பயிலும் மாணவர்கள் வாசிப்பில் பிரச்சனை எதிர்நோக்கி இருக்கின்றனர் என்பதைக் கண்டறிந்துள்ளது. இதனிலிருந்து, விடுபட தர அடிப்படையிலான புதிய தமிழ்மொழிக் கலைத்திட்ட மொழித்திறன்களில் வாசிப்புத் திறன்களுக்கு முக்கியதுவம் அளிக்க வேண்டும் (தர அடிப்படையிலான தமிழ்மொழிக் கலைத்திட்டம், 2010)[1]. இக்கட்டுரையில், வாய்விட்டு வாசிக்கும் உள்ளடக்கத் தரங்களைக் கற்பிக்கும் அணுகுமுறைகள் விவரிக்கப்படவுள்ளன.

## மலேசியக் கல்வித் தத்துவமும் பரிகார போதனையும்

இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலை பெற தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும், (மலேசியக் கல்வி அமைச்சு,1982)[2]. இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வுபெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுச் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும், செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

இதன் விளைவால், 1960-ல் மலேசியக் கல்வி அமைச்சு பின் தங்கிய மாணவர்களுக்கு அடிப்படைத் திறன்களான எழுத்து, வாசிப்பு மற்றும் கணக்கு ஆகியவற்றைத் தொடக்கப்பள்ளியில் அறிமுகப்படுத்தியது. மேலும், 1983 ஆம் ஆண்டில், மலேசிய கல்வி முறை ஆரம்பப் பள்ளிப் புதிய பாடத்திட்டத்தை (கே.பி.எஸ்.ஆர்) அறிமுகப்படுத்தியது. இஃது அடிப்படைத் திறன்களான எழுத்து, வாசிப்பு மற்றும் கணக்கு போன்றவற்றைக் கைவர பெறுவதில் கவனம் செலுத்தியது. இதனை, ஒவ்வொரு ஆரம்பப் பள்ளியிலும் உருவாக்கப்பட்ட குறைநீக்கல் திட்டத்தின் மூலம் சிக்கலைச் சமாளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**பரிகாரப் போதனையின் கருத்தும் வரையறையும்**

ஆய்வாளர் ஷெரீஃபா அல்லியா அல்சாகோஃப் (1983)[3], அவர்களின் கருத்துப்படி வகுப்பில் பாட வேளையின் போது கற்றலில் பின் தங்கிய மாணவர்களைக் கண்டறிந்து சிறப்புக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். மேலும், குறைநீக்கற் கற்பித்தல் நடவடிக்கை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். மேலும், குறைநீக்கற் கற்பித்தல் என்பது மிகவும் பலவீனமான மாணவர்களுக்குக் குறிப்பிட்ட அணுகுமுறைகளின் வழி நிவர்த்தி காண முடியும் என்பது ஆய்வாளர் ஷெரீஃபா அல்வியா அல்சாகோஃபின் கூற்றாகும் (1979)[4].

மலேசியக் கல்வித் திட்டம், குறைநீக்கல் திட்டத்தில் கற்றல் சிரமங்களைக் கொண்ட மாணவர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு முயற்சியாகும், பரிகாரபோதனைத் திட்டம் என்பது அடிப்படை வாசிப்புத் திறன்களை வளப்படுத்த குறிப்பாகக் கற்க சிரமப்படும் மாணவர்களின் பிரச்சினையைச் சமாளித்துத் திரிதப்படுத்தும் முயற்சியாகும்.

**பையப் பயிலும் மாணவர்களின் வாசிப்பு**

வாசிப்பு என்பது படித்தலில் சொற்களைக் காணல், உச்சரித்தல், பொருளுணர்தல் என்று கூறுகிறார் (சுப்புரெட்டியார், ந. 2000)[5]. வாசிப்பை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை, வாய்விட்டு வாசித்தல் மற்றும் மௌன வாசித்தல், பையப் பயிலும் மாணவர்கள் வாய்விட்டு வாசிப்பதே சாலச் சிறந்தது என்பதனை இவ்வாய்வுக் கட்டுரையில் விவாதிக்கப்படவுள்ளது.

**வாய்விட்டு வாசித்தல்**


பையப் பயிலும் மாணவர்களுக்கு வாய்விட்டு வாசிக்கும் அணுகுமுறை இன்றியமையாததாகிறது. எடுத்துக்காட்டாக, ஈரெழுத்துச் சொற்கள் மற்றும் சிறு பத்தி வாசித்தல் போன்ற நடவடிக்கையின்வழி பையப் பயிலும் மாணவர்களின் வாய்விட்டு வாசிக்கும் திறனை மேம்மடுத்த முடியும் (கணபதி, வி. 2002)[6]. மேலும், வாய்விட்டு வாசித்தலின் வழி பையப் பயிலும் மாணவர்களைப் பள்ளி அளவில் நடத்தப்படும் போட்டிகளில் கலந்துகொள்ள வைப்பதால் மதிப்பீடு செய்ய முடியும்.

**பையப் பயிலும் மாணவர்களின் வாசிப்புத் திறனைக் கற்பிக்கும் முறைகள்**

தமிழ் பயிற்றும் முறை நூலில் வாய்விட்டு வாசிக்கும் முறையை ஐந்து படி முறைகளாகப் பிரித்துக் காட்டியுள்ளார் (சுப்புரெட்டியார் . ந, 2002)[5]. எழுத்து முறை, சொல் முறை, பார்த்துச் சொல்லும் முறை, சொற்றொடர் முறை, கதை முறை ஆகிவையாகும். இந்த ஐந்து வாசிப்புத் திறன் முறைகளில் பையப் பயிலும் மாணவர்களுக்குச் சொல் முறை மற்றும் சொற்றொடர் முறை ஆகியவை அதிகம் கையாளப்படுகின்றன.

**பார்த்துச் சொல்லும் முறையும் சொல் முறையும்**

பரிகார வகுப்பில் பார்த்துச் சொல்லும் முறையைப் பின் பற்றுவது இன்னும் அமலில் உள்ளது. ஈரெழுத்துச் சொல்லை வெண்பலகையிலோ மின்னட்டைகளிலோ தயாரித்து மாணவர்களுக்குக் காண்பித்து உச்சரித்துக் காட்டுவர்.




*படம் 1*: ஈரெழுத்துச் சொல்லட்டைகள்

குறைநீக்கல் ஆசிரியரைத் தொடர்ந்து பையப் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவராகச் சொல்லை வாசித்தல் வேண்டும். இவ்வாறாகச் செய்தால் பையப் பயிலும் மாணவர்களின் வாசிப்புச் சரளம் அடையும்.

**படிநிலை ஒன்று பையப் பயிலும் மாணவர்களின் வாசிப்பு உள்ளடக்கத் தரங்கள் அணுகுமுறைகள்**


கே.எஸ்.எஸ்.ஆர். புதிய பாடத்திட்டம் நடைமுறையில் எட்டு வாசிப்பு உள்ளடக்கத் தரங்கள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் குறைநீக்கல் மாணவர்களுக்கு ஆய்வாளர் இரண்டு தரங்களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றில் 2.5 அருஞ்சொற்களின் பொருளறிந்து வாசிப்பர் மற்றும் 2.6 பல்வகை எழுத்துப்படிவங்களை வாசித்துப் புரிந்து கொள்வர். மேலே கொடுக்கப்பட்டுள்ள உள்ளடக்கங்கள் படிநிலை ஒன்று பையப் பயிலும் மாணவர்களின் தரத்திற்கு ஏற்றவாறு கற்பிக்கும் அணுகுமுறைகள் தொடர்ந்து விவாதிக்கப்படவுள்ளன.

**பையப் பயிலும் மாணவர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்மொழித் தர ஆவணத்தில் வாசிப்பு உள்ளடக்கத் தரங்களைக் கற்பிற்கும் அணுகுமுறைகள்**


இவ்வாய்வுக் கட்டுரையில் படிநிலை ஒன்றில் பையப் பயிலும் மாணவர்களுக்கு வாசிப்புக் கற்பிக்கும் அணுகுமுறை மட்டுமே விவாதிக்கப்படுள்ளது.

**பையப் பயிலும் மாணவர்களின் அருஞ்சொற்களின் பொருளறிந்து வாசிப்பர்**

படிநிலை ஒன்று பையப் பயிலும் மாணவர்களுக்கு வாசிப்புப் பகுதியையொட்டிய அருஞ்சொற்கள் உண்டு. பையப் பயிலும் மாணவர்களுக்குக் குறைநீக்கல் ஆசிரியர் அவர்களின் தரத்திற்கேற்றவாறு பாடக் குறிப்பைத் தயாரித்துக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, ஈரெழுத்துச் சொற்களை வாசிக்க வைக்கலாம்.





*படம் 2*: உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லட்டைகள்




*படம் **3:*** உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல்லட்டைகள்

**பையப் பயிலும் மாணவர்கள் சொற்றொடர் முறையை வாசிப்பர்**

சொற்றொடர் முறையில் பையப் பயிலும் மாணவர்கள் ஈரெழுத்துச் சொற்களைப் பிழையில்லாமல் வாசிக்கின்றனர். பிறகு, வாசித்த சொற்களை இணைத்து வாசிக்கப் பழகுகின்றனர். பையப் பயிலும் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவே இம்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.




*படம் 4:* சொற்றொடர் சொல்லட்டைகள்

**முடிவுரை**

தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடத்தில் படிநிலை ஒன்றில் பையப் பயிலும் மாணவர்களுக்கென்று இன்னும் குறைநீக்கல் போதனை இருந்த வண்ணம் இருக்கின்றது. இதனைக் களைய மலேசியக் கல்வி அமைச்சு குறைநீக்கல் போதனை ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பணிமனைகளை அவ்வப்போது ஏற்பாடு செய்த வண்ணமே உள்ளது (மகேந்திரன், ம 2018)[7] இதன்வழி, பையப் பயிலும் மாணவர்கள் தங்கள் வாசிக்கும் திறனை மேலும் மேம்படுத்திக்கொள்வார்கள்.

**மேற்கோள் நூல்கள்:**


1. Kementerian Pelajaran Malaysia. (2010). *KSSR Bahasa Tamil Tahun 1 – 3,* Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pelajaran Malaysia.
2. Kementerian Pelajaran Malaysia (1982), *Falsafah Pendisikan Kebangsaan, Matlamat dan Misi, Pusat Pembangunan Kurikulum,* Kementerian Pelajaran Malaysia.
3. Sharifah Alwiyah Alsagoff. (1983). *Ilmu pendidikan pedagogi.* Kuala Lumpur: Heinemann Educational Books (Asia). Ltd.

4. Sharifah Alwiyah Alsagoff. (1979). *Falsafaf Pendidikan*. Kuala Lumpur: Heinemann Educational Books (Asia). Ltd.
5. Suppureddiyar, N. (2020). *Tamil payidrum murai [Tamil teaching method]*. Chitambaram: Meiyappan Tamilaivagam.
6. Kanapathy, V. (2002). *Nadramil karpikkum murai [Tamil teaching method]*. Chennai: Santha Publication.
7. Mahendran, M. & Kalyani, V. (2018). Motivating ESL Learners of Low Proficiency In Reading Through An Extensive Reading Programme. *Muallim Journal of Social Sciences and Humanities*, *2*(3) 177-184. Retrieved from https://mjsshonline.com/index.php/journal/article/view/61/56